பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
05 01 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு அளப்பரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. திருவண்ணாமலையில் விமான நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

4. தமிழ் மொழிக்கு பெருமை சேர்த்தவர்களை கௌரவிக்கும் வகையில் திருவள்ளுவர் தினத்தன்று வழங்கப்படும் விருதுகளுக்காக 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற 162 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

நாட்டின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு அளப்பரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், நாடு பல்வேறு துறைகளில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க சாதனைகளுக்கு திறன்வாய்ந்த இளைஞர்கள் பங்காற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு இளைஞர்களின் ஆற்றல் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணி செய்தி பிரிவுக்கு அவர் அளித்துள்ள பிரத்யேக பேட்டியில், தனிநபர் குறித்த தகவல்கள் மற்றும் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் வரைவு விதிகள் வகுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மக்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள், குழந்தைகள் எதிர்கொள்ளக்கூடிய டிஜிட்டல் அபாயங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், மக்கள் தங்கள் உரிமைகளை எளிதாகப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த வரைவு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த ஏதுவாக இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

வேளாண்துறை மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு துரிதமாக மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் காணொலி மூலம் கலந்துகொண்டு பேசிய அவர், வேளாண்துறை நடப்பாண்டில் 4 சதவீத அளவிற்கு வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

பேரிடர் காலங்களில் ஏற்படும் பயிரிழப்புகளை சரியாகவும், துல்லியமாகவும் மதிப்பீடு செய்யும் வகையில் செயற்கைக்கோள் உதவியுடன் கணக்கெடுப்பு பணிகளை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உற்பத்தி செய்யும் மாநிலங்கள் மற்றும் நுகர்வு மாநிலங்களுக்கு இடையேயான பொருட்கள் மீதான விலைகளில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் வகையில் பொருட்களுக்கான போக்குவரத்து மற்றும் சேமிப்புக் கிடங்குகளின் செலவுகளை மத்திய அரசே ஏற்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறினார்.

<<<<>>>>

திருவண்ணாமலையில் விமான நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் மேல்செங்கத்தில் புதிய பேருந்து நிலையத்தை நேற்று திறந்து வைத்துப் பேசிய அவர், ஆன்மிக நகரான திருவண்ணாமலைக்கு வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் விமான நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவத்தார்.

செங்கம் பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், நகர்ப்புற மேம்பாட்டுப் பணிகளுக்காக 5 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் செங்கம் புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

திருவண்ணாமலை - தருமபுரி மாவட்டங்களை இணைக்கும் வகையில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

தமிழ்மொழி மற்றும் தமிழ்க் கலாச்சாரத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்றியவர்களுக்கு ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று தமிழக அரசு விருதுகள் வழங்கி கௌரவித்து வருகிறது.

இதன்படி இந்த ஆண்டு திருவள்ளுவர் தினத்தன்று விருதுகள் வழங்குவதற்காக 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

இதன்படி திருவள்ளுவர் விருது புலவர் மு. படிக்கராமுவிற்கும், பேரறிஞர் அண்ணா விருது திரு. எல். கணேசனுக்கும், மகாகவி பாரதியார் விருது திரு. கவிஞர் திரு. கபிலனுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு. பொன். செல்வகணபதிக்கும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது, மருத்துவர் ஜி.ஆர். ரவீந்திநாத்துக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதன் விருது, திரு. வெ.மு. பொதியவெற்பன்-னுக்கும், தந்தை பெரியார் விருது, திரு. விடுதலை ராஜேந்திரனுக்கும், அண்ணல் அம்பேத்கர் விருது, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவிக்குமாருக்கும், முத்தமிழ்க் கலைஞர் விருது திரு. முத்து வாவாசிக்கும் வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ஊராட்சிமன்ற அலுவலகம், சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை ஊராட்சியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக அவர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், ஊராட்சி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக 13 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் வேலைநாட்கள் மற்றும் ஊதியத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் மார்கழி திருவிழாவையொட்டி சுவாமிக்கு தைலக்காப்பு உற்சவ விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமியை தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. ஜாக் சல்லிவன், இரண்டு நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

<<<<>>>>

இஸ்ரேலுக்கு 8 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தில்லியில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக 45 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

சத்தீஸ்கரில் பீஜப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 3 பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

பிரயாக்ராஜில் நடைபெறும் கும்பமேளாவிற்கு அதிக அளவில் வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக ரயில்வே நிர்வாகம் சிறப்பு முன்னேற்பாட்டுப் பணிகளை செய்துள்ளது.

<<<<>>>>

திருப்பூரில் உரிய ஆவணங்களின்றி தங்கியிருந்த வங்கதேசத்தைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் தமிழக அரசின் பொங்கல் தொகுப்பில் வழங்குவதற்காக கொள்முதல் செய்யப்பட உள்ள கரும்புகளின் தரத்தை அம்மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு அல்லது பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரிய தாட்கோ மூலம் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் நாளை வெளியிடப்படும் என்று ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியாவுக்கு எதிரான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற 162 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிட்னியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 3ஆம் நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 161 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ரிஷப் பந்த் அதிகபட்சமாக 61 ரன் எடுத்தார்.

ஆஸ்திரேலியாவின் ஸ்காட் போலந்த் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 162 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் ஆஸ்திரேலியா சற்றுமுன் வரை 3 விக்கெட் இழப்புக்கு 65 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்சில் 185 ரன்னுக்கும், ஆஸ்திரேலியா 181 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

<<<<>>>>

ரூர்கேலாவில் நடைபெற்று வரும் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் கலிங்கா அணி – சூர்மா அணியையும், தமிழக அணி – உத்தரப்பிரதேச அணியையும் எதிர்கொள்கின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பெங்கால் அணி – தில்லி அணியையும், குணசிகா அணி – ஹைதராபாத் அணியையும் வென்றன.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி – கேரள அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் கோவா மற்றும் ஜம்ஷெட்பூர் அணிகள் வெற்றி பெற்றன.

**<<<<The End>>>>**